29th October 1962]

தனியார் காடுகள் (பாதுகாப்பு)

* 835 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தனியார் காடுகள் பராமரிப்பு சட்டத்திலுள்ள கஷ்டங்களை நீக்குமாறு நீலகிரியிலிருந்து வந்த தூது கோஷ்டி அரசாங்கத்திற்கு மனு சமர்ப்பித்துள்ளதா?

(இ) அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI N. NALLASENAPATHY SARKARAI MANRADIAR: (a) and (b) Various representations have been received stating that difficulties are experienced in the working of the Madras Preservation of Private Forests Act, 1949. They are under consideration.

திரு. டி. கார்ச்சா கவுடர்: தனியார் காடுகளை நிர்ணயிக்கும்போது, ஒரு சர்வே நம்பரில் சுமார் ஐம்பது ஏக்கர்கள் இருந்து, அதில் பத்து ஏக்கரில்தான் காடு இருப்பினும், பூரா இடங்களையும் காடுகள் என்று நோடிபை பண்ணிக்கொண்டு வருகிறார்கள். அதனால் இடைஞ்சலாக இருக்கிறது என்று மனுக்களில் முக்கியமாகக் குறிப்பிட்டிருப்பதை அமைச்சர் அவர்கள் கவனிப்பாரா—

கனம் திரு ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அந்த விதமான புகார்கள் என்னிடத்தில் இதுவரை வரவில்லை என்று கனம் அங்கத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பொன்னையா: தனியார் காடுகளிலிருந்தோ அல்லது எஸ்டேட்டுகளிலிருந்தோ மரங்களை வெட்டி வெளியே எடுத்துக் கொண்டுபோய் விற்பனை செய்யாமல், தங்களுக்கு தேவையான மரங்களை மட்டும் வெட்டிக்கொண்டுபோய் வீடு கட்டுவதற்கு உபயோகப்படுத்திக் கொள்ளும் வகையில் அந்த சட்டத்தைச் சிறிது தளர்த்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

Madras State Electricity Board

* 836 Q.—SRI V. KRISHNAMOORTHY: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have received any interests from the Electricity Board for the capital transferred to the Board?

THE HON. SRI R. VENKATARAMAN: The answer is in the affirmative.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: மின்சார இலாகாவானது அரசாங்கத்தோடு இருந்த சமயத்தில் வட்டி வரவு வைத்துக்கொள்கிற பழக்கம் இல்லாமல் இருந்தது. ஆனால், மின்சார போர்டாக மாற்றப்பட்டதற்குப் பிறகு, ஆண்டொன்றுக்கு ஆறரை கோடி ரூபாய்க்கு மேல் போர்டாரிடமிருந்து வட்டியாக வசூலிக்கும்

காரணத்தால் தான் அந்த மின்சார போர்டிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்குப் போனஸோ, சம்பள உயர்வோ கொடுக்க முடியவில்லை என்பதை அரசாங்கம் உணருமா? அப்படி உணர்ந்தால், வட்டி விகிதத்தை குறைத்து, மின்சார போர்டில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு அளிக்க முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: போர்டுக்கு சர்க்கார் 118 கோடி ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது. இந்த 118 கோடி ரூபாயை வெளியிலிருந்து கடன் வாங்கித்தான் சர்க்கார் போர்டுக்குக் கொடுத்திருக்கிறார்கள். வெளியிலிருந்து கடன் வாங்கியிருக்கிறது என்றால் மத்திய அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்கியும், நாம் டிபெஞ்சர் ரெயில் பண்ணியும் இந்தப் பணத்தை வாங்கியிருக்கிறோம். அதற்கெல்லாம் 4½ சத விகிதம் வட்டி சர்க்கார் கொடுக்க வேண்டி இருக்கிறது. அதற்கு மேலே ¾ சத விகிதம் அல்லது ஒரு சத விகிதம் வைத்து, 5¼ சத விகிதத்திற்கு நாம் கடன் கொடுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால் வட்டியைக் குறைக்க முடியாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

4-00 p.m. **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கொடுத்த பணத்திற்கு வட்டி வாங்குவதைப் பற்றியோ மற்றதைப் பற்றியோ நான் சொல்லவில்லை. மின்சார போர்டுக்கு 'காபிடல்'-ஆக மாற்றும் சமயத்தில், மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களுக்கு எல்லாம் தொகை போட்டு அதற்காக வட்டியை வசூலிக்கிறார்களா? அப்படி வசூலிக்கிற பணமாக இருந்தால், அதையாகிலும் சர்க்கார் ரத்து செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: 1957-ம் ஆண்டு இந்த மின்சார போர்டுக்கு 'காபிடல்' எல்லாம் மாற்றிக் கொடுக்கப்பட்ட போது, 71 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்பட்டது. அதற்கு வட்டி சர்க்கார் கொடுக்க வேண்டித்தான் இருக்கிறது. அதனால் போர்டிலிருந்து வட்டி வாங்குகிறோம்.

பிற்பட்ட வகுப்பினருக்கு வீட்டு வசதி

* 837 கேள்வி.—திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆதித் திராவிடர்களுக்கு செய்து தரப்படும் வீட்டு வசதி போல் மற்ற பிற்பட்ட இனத்தவர்களுக்கு 50 சத விகிதம் வாங்கிக் கொண்டு வீடு கட்டிக் கொடுக்கும் வகையில் திட்டத்தை விஸ்தரிக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி: ஷெட்யூல்டு வகுப்பினரைப் போலவே மிகவும் பிற்போக்கான மக்கள் கிராமங்களிலே மனைக்கட்டு கோரும் போது, அவர்கள் கோரும் மனைக்கட்டுக்காக கொடுக்க வேண்டிய தொகையின் விலையில் பாதிப் பணத்தை அரசாங்கம் அவர்களுக்கு கொடுத்து உதவ முன்வருமா?